# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:85** **தேதி:-18.12.2015**

## BSNL ஊழியர் சங்கத்தின் மகத்தான மனித நேயப்பணி

அன்பார்ந்த தோழர்களே,

தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் நிவாரணப் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு BSNL ஊழியர்களின் மனிதநேய உதவிகளின் காரணமாக நிவாரணப் பொருட்களை வழங்கிய செய்திகளை எல்லாம் உங்களுக்கு தெரிவித்துள்ளோம்.

புயலால் சீரழிக்கப்பட்ட சென்னை நகரினை தூய்மைப் படுத்தும் நடவடிக்கையினை பல தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வந்தனர். அதன் அடிப்படையில் நமது தமிழ் மாநில சங்கம் அடுத்த கட்ட நடவடிக்கையாக தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கமும் இணைந்து ஒரு நாள் சென்னை நகரின் ஒரு பகுதியை தூய்மைப்படுத்த 15.12.2015 அன்று முடிவு செய்தது. முடிவு செய்து ஊழியர்களிடையே அறைகூவல் விட்ட ஓரிரண்டு தினங்களில் தமிழகம் முழுவதும் இருந்து 250க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டனர். பேருந்துகளிலும், ரயிலில் முன்பதிவு இல்லாத இருக்கைகளிலும், வேன்களிலும் தமிழகத்தின் தென்கோடி குமரி முதல் சென்னை வரை மேற்கே தர்மபுரி முதல் கிழக்கே காரைக்கால் வரை உள்ள அனைத்து பகுதிகளில் இருந்தும் தோழர்கள் குவிந்தனர். தமிழகத்தின் தலை நகரை அடைந்த தோழர்கள் அனைவரும் அருகம்பாக்கத்தில் உள்ள MMDC பேருந்து நிலையத்திற்கு வந்தனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான சேவை கொடுத்த ஒரே தொலை தொடர்பு நிறுவனமான நமது BSNLன் சின்னம் தாங்கிய தொப்பியை தலையில் அணிந்திருந்தனர். BSNLEU மற்றும் TNTCWU ஆகிய நமது சங்கங்களின் பெயரை ஒரு புறமும், 'அன்றும், இன்றும், என்றும் மக்கள் சேவையில் BSNL" என்ற வாசகத்தை மறுபுறமும் கொண்டிருந்த ஏப்ரனை தோழர்கள் அணிந்திருந்தது பார்ப்பவர்களின் கண்களுக்கு விருந்தளித்தது என்றால் அது மிகையாகாது.

வந்திருந்த தோழர்களை இரண்டு மாநில சங்கமும் வரவேற்றது. அந்த துப்புரவு பணியை பல்வேறு பணிகளுக்கும் இடையே வந்திருந்து, 'மயில் என்றால் ஆட வேண்டும், குயில் என்றால் பாட வேண்டும், மனிதன் என்றால் மனித நேயம் இருக்க வேண்டும்" என்று அறிவுறுத்தி துப்புரவு பணியினை தமிழக BSNLன் தலைமை பொது மேலாளர் திருமதி N.பூங்குழலி ITS அவர்கள் துவக்கி வைத்தார். சாதி வெறி குப்பைகளை மக்கள் மனதில் இருந்து அகற்றிட வேண்டும் என்று சூளுரைத்து பணியாற்றும் தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தமிழ் மாநில தலைவர் தோழர் P.சம்பத் அவர்கள் நமது தோழர்களை பாராட்டி சென்னை நகரை தூய்மை படுத்தும் இந்த பணி வெற்றி பெற தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தூய்மை பணியினை அருகில் இருந்த பேருந்து நிலையத்தில் குப்பைகளை அகற்றி நமது தலைமை பொது மேலாளர் துவக்கி வைத்தார். குழுமியிருந்த தோழர்கள் சுறுசுறுப்பாக பேருந்து நிலையத்தை சுத்தம் செய்தனர். பின்னர் அங்கிருந்து சிறு சிறு குழுக்களாக பிரிந்து MMDC காலணியில் உள்ள பல தெருக்களை சுத்தம் செய்தனர். சற்றே உடல் களைப்பாற தேநீர் அருந்த தோழர்கள் சென்றால் இலவசமாக கடைக்காரர்கள் தேநீர் வழங்கி தங்கள் ஆதரவை தெரிவித்தனர். பின்னர் புறப்பட்ட தோழர்கள் அங்கிருந்த அருகம்பாக்கம் அரசு மேல்நிலை பள்ளிக்குள் நுழைந்தனர். பள்ளியின் சுற்றுப்புறம் மற்றும் உள்ளிருக்கும் விளையாட்டு திடல் உள்ளிட்ட அனைத்து பகுதிகளையும் சுத்தம் செய்தனர். அங்கிருந்த ஆசிரியர் ஒருவர் அனைவருக்கும் சூப் வழங்கி பேத்தி பிறந்த தனது மகிழ்வை நம்முடன் பகிர்ந்துக் கொண்டார். அந்த பள்ளியில் மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த்து. ஐந்திற்கும் மேற்பட்ட

அறைகளை நம்முடைய தோழர்கள், கடும் சிரமத்திற்கு இடையே சுத்தம் செய்தனர். மாணவர்களுக்கு அறிவூட்டும் புத்தகங்கள் மற்றும் நோட்டுக்கள் எல்லாம் கடுமையாக சேதமடைந்துள்ளதை பார்க்கும் போது அனைத்தையும் சுத்தம் செய்யும் தண்ணீரும் கூட மதம் பிடித்து வெள்ளமாக மாறியது என்றால் கடும் சேதத்தை விளைவிக்கும் என்பதை நமக்கு உணத்தியது. இந்த தமிழகத்தின் ஒரு துளியாக உள்ள நம்மால் கூட நமது உழைப்பை செலுத்தி இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியையாவது தூய்மைப் படுத்த முடிந்ததே என்ற மன நிறைவு நம் தோழர்கள் அனைவருக்கும் ஏற்பட்டது.

நமது இந்த மகத்தான மனித நேயப்பணியினை MMDC காலணியில் உள்ள பேருந்து ஓட்டுனர்களும், பயணிகளும், கடைக்காரர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் மட்டுமல்லாமல் அனைத்து பகுதி மக்களும் மனம் திறந்து பாராட்டினார்கள். அவர்களின் பாராட்டுக்கள் நமது தோழர்களின் உடல் சோர்வை போக்கியது. மேலும் மேலும் இது போன்ற சமூக நல பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற உந்துதலை நமக்கு உண்டாக்கியது.

மிகச்சரியான நேரத்தில் நம்மை இந்த பணியில் ஈடுபட ஊக்குவித்த நமது அகில இந்திய சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களுக்கும், உடலால் ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தாலும், உள்ளத்தால் எப்போதும் நம்மோடு நெருங்கி இருந்து தொலை பேசி மூலம் பல வழிகாட்டுதல்களை கொடுத்த நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்களுக்கும், மனித நேயத்தின் உண்மையை நாம் உணரும் வண்ணம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டிய BSNL ஊழியர் சங்கத்தின் கேரள மாநில மாநாட்டு பிரதிநிதிகளுக்கும், நமது அழைப்பை ஏற்று வந்திருந்து துவக்கி வைத்த தமிழ் மாநில BSNLன் தலைமை பொது மேலாளர் திருமதி N.பூங்குழலி அவர்களுக்கும், தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தமிழ் மாநில தலைவர் தோழர் P.சம்பத் அவர்களுக்கும், நமது பணியில் அருகில் இருந்து வழிகாட்டி ஒத்துழைத்த அண்ணாநகர் பகுதி CPI(M) பகுதிக் குழு தோழர்களுக்கும், இந்த பணிக்கு வந்தவர்களை கவனித்துக் கொள்ள உதவி செய்த சென்னை தொலைபேசி பகுதியை சேர்ந்த தோழர் ரகுவரன், தமிழ் மாநில CGM அலுவலக தோழர்கள் மற்றும் PROJECT பகுதியை சேர்ந்த தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நமது மாநில சங்கத்தின் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இந்த பணியில் எந்த வித தயக்கமும் இன்றி நம்மோடு இணைந்து பெருந்திரளாய் பங்கேற்ற தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்க நிர்வாகிகளுக்கும், BSNLCCWFன் AGS தோழர் C.பழனிச்சாமி அவர்களுக்கும், BSNL WWCC ஒருங்கிணைப்பாளர் தோழர் P.இந்திரா அவர்களுக்கும் நமது மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மாநில சங்கத்தின் அறைகூவலை ஏற்று உடல் சோர்வு, நிதிச்சுமை எதையும் பார்க்காமல் மாநில சங்கமே வியக்கும் வண்ணம் பெருந்திரளாய் கூடிய அனைத்து ஊழியர்களையும், ஒப்பந்த தொழிலாளர்களையும், குறிப்பாக பெண் தோழியர்களையும் தமிழ் மாநில சங்கம் இரு கரம் கூப்பி மனதார பாராட்டுகிறது.

ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக, அரசின் தவறான பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக மட்டும் போராடக் கூடிய சங்கம் இதுவல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதிலும் தமிழகத்தில் முன்னணி படையாக இந்த சங்கம் திகழும் என்பதை எடுத்துக் காட்டும் வண்ணம் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**